# 18.07.2014 இடைக்கால தீர்ப்பும் - பின்னணியும்

**- TNPEO**

✱) பகுதி நேர பட்டய பொறியாளர்கள் உள்முத் தேர்வு மூலம் T.A பதவிக்கு வராமல் J.E. IInd Grade பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் தனிநீதிபதி அவர்களால் 16.12.2010-ல் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

✱) 16.12.2010 தனி நீதிபதி அவர்களின் தீர்ப்பை தொடர்ந்து இதே போன்று பல வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்து மேற்கண்ட தீர்ப்பை அவர்களும் பெற்றனர்.

✱) மேற்கண்ட தனிநீதி அவர்களின் தீர்ப்புபடி மின்சார வாரியம் ஒரு பகுதியினருக்கு J.E. IInd Grade பதவி உயர்வு வழங்கியது. அதன் பிறகு அதன் பாதிப்பை புரிந்துக் கொண்டு J.E IInd Grade பதவி உயர்வு வழங்கிய தீர்ப்பு உள்ளிட்டு மற்ற தனி நீதிபதிகளின் தீர்ப்புக்கு வாரியம் மறுசீராய்வு மனு போட்டதில் தனிநீதிபதி அவர்களால் மனு சீராய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதை தொடர்ந்து இந்த தனிநீதிபதி அவர்களின் தீர்ப்பை ரத்துசெய்திட கோரி வாரியம் சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்சில் மேல்முறையீடு செய்து தற்போது மேல்முறையீடு மனு நிலுவையில் உள்ளது.

✱) இந்த மேல் முறையீடு மனுவின் எதிர்மனுதாரர்கள் ஏற்கனவே தனிநீதிபதி அவர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பின் மனுதாரர்கள் ஆவார்கள். மேல் முறையீடு மனுவின் எதிர் மனுதாரர்கள் இந்த மேல் முறையீட்டு மனுவில் இடைக்கால தீர்ப்பு வழங்கிட (Micilinious Petition) M.P மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தனர். இதன்மீது உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் 18.07.2014-ல் ஒரு இடைக்கால தீர்ப்பை வழங்கியுள்ளது.

✱) சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் -ல் J.E IInd Grade பதவிஉயர்வு குறித்த பகுதி நேர பட்டய படிப்பு படித்தவர்கள் தொடர்ந்த வழக்கில் வழங்கப்பட்ட 16.12.2010 தேதியிட்ட தனி நீதிபதி அவர்களின் தீர்ப்பினை எதிர்த்து தான் மேல்முறையீட்டு மனு நிலுவையில் உள்ளது. பதவி உயர்வு JE I- ஐ பற்றிய வழக்கு மேற்படி தனிநீதிபதி தீர்ப்புரை 16.12.2010லோ அல்லது அதை சார்ந்த மேல்முறையீட்டிலோ இல்லை மேலும் JE IInd Grade to JE Ist Grade-க்கான பதவி உயர்வு குறித்த வழக்கு W.P. No. 1871/2014 மூலம் சென்னை உயர்நீதிமன்ற

தனிநீதிபதி அவர்களிடம் நிலுவையில் உள்ளது. அதில் இடைக்கால தடையும் உள்ளது. இந்நிலையில் மேற்படி அப்பீல் மனுவில் எதிர் மனுதாரரும், M.P.-மனுவில் மனுதாரர்கள் மேற்படி சூழ்நிலையை நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் JE IInd Grade ot JE Ist Grade பதவிஉயர்வு என்பது மேல்முறையீட்டு அப்பீலில் Subject Matter-ஆக இல்லை என்று தெரிந்தும் நீதிமன்றத்தில் மேற்படி மனு M.P. No 1/14 - in WA No. 1573/12 தாக்கல் செய்துள்ளனர். எனினும் நீதிமன்றம் மேல் குறிப்பிட்டுள்ளவாறு மட்டுமே இடைக்கால தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி சூழலில் நீதிமன்றம் JE IInd Grade to JE Ist Grade-க்கு மட்டுமே பதவி உயர்வு வழங்கிட உத்திரவிட்டுள்ளதாக ஒரு யூனியன் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் தவறானதாகும்.

✱) சிலர் இந்த 18.07.2014 இடைக்கால தீர்ப்பை அமலாக்கம் செய்து JE IInd Grade பதவி உயர்வு வழங்கினால் பகுதி நேர பட்டயம் படித்து தனிநீதிபதி அவர்களிடம் தீர்ப்பு பெற்ற மனுதாரர்களையும் உள்ளடக்கிய JE IInd Grade வழங்கிட வேண்டும் என்று இடைக்கால தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளதாக குழப்பி வருகின்றனர் இது தவறானதாகும்.

✱) 18.07.2014 இடைக்கால உத்தரவில் “எந்த பதவி உயர்வு வேண்டுமானாலும் வாரியம் வழங்கலாம்” -என்று வாரியத்திற்கு அதிகாரம் வழங்கி உத்தரவிட்டுள்ளனர். எனவே வாரியத்தின் கொள்கை நிலைபாட்டிற்கு மாறாக உள்ள, வாரியத்தால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள மனு நிலுவையில் உள்ளதாலும் பகுதி நேர பட்டயம் படித்தவர்களுக்கு JE IInd Grade பதவிஉயர்வு வழங்கினால் மேலும் சிக்கலை ஏற்படுத்தும் சூழல் உள்ளதால் வாரியம் இவர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டிய கட்டாய நிலை எதுவும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

✱) மேலும் T.A. to J.E IInd Grade மற்றும் Non Diplamo to JE IInd Grade பதவி உயர்வுகள் வழங்கக் கூடாது என நீதிமன்றத்தில் எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. மேலும் இந்த பதவி உயர்வுகள் வழங்குவதற்கு நீதிமன்றத்தால் எந்த தடையும் பெறப்பட்டு நிலுவையில் இல்லை. எனவே, வாரியத்திற்கு எவ்வித பிரச்சனையும் இல்லாத, வாரியம் ஏற்கனவே இயல்பாக, வழக்கமாக வழங்கி வந்த தற்போது வழங்க வேண்டிய TA to JE IInd Grade மற்றும் Non Diplamo to JE IInd Grade ஆகிய பதவி உயர்வுகள் மட்டுமே இந்த 18.07.2014 இடைக்கால உத்தரவு மூலம் மின்சார வாரியம் வழங்க முடியும் என்பதால் இந்த பதவி உயர்வுகளை உடனே வழங்கிட வேண்டுமென TNPEO வாரியத்தை கேட்டுக் கொண்டுள்ளது.